# சன் யாட் சென் நன்யாங் நினைவு மண்டபத்தின் வரலாறு



டாக்டர் சன் யாட் சென்னின் சீனப் புரட்சிக் கூட்டணி அல்லது டொங் மெங் ஹுய் அமைப்பின் நன்யாங் (தென்கிழக்காசியா) தலைமையகமாகத் திகழ்ந்த சிங்கப்பூர், 1911 புரட்சியில் முக்கிய பங்கு வகித்தது. அந்தப் புரட்சியில்தான் சிங் அரசாட்சி கவிழ்க்கப்பட்டு, நவீனகால சீனாவின் உருவாக்கத்திற்கு வழிகோலப்பட்டது. டாக்டர் சன்னுக்கு வெளிநாட்டில் விசுவாசமான சீன ஆதரவாளர்கள் பலர் இருந்தனர். டியோ எங் ஹாக், டான் சோர் லாம், லிம் நீ சூன் போன்றோர் அவர்களில் சிலர். நிதி திரட்டுதல், புரட்சிக் கோட்பாடுகளைப் பரப்புதல் போன்ற பல்வேறு வழிகளில் அவர்கள் ஆதரவளித்தனர்.

ஆரம்பத்தில் வான் சிங் யுவான் என்றழைக்கப்பட்ட இந்த வில்லாவை, டியோ எங் ஹாக் என்பவர் 1905ல் தனது தாய்க்கான ஓய்வுக்கால இல்லமாக வாங்கினார். பிற்பாடு, டாக்டர் சன்னின் புரட்சி நடவடிக்கைகளுக்காக வில்லாவை அவரிடம் கொடுத்தார். இந்த வில்லாவில்தான் டாக்டர் சன் மூன்று கிளர்ச்சிகளுக்குத் திட்டமிட்டு, முடிவில் 1911ல் வூச்சாங் கிளர்ச்சியை வெற்றிகரமாக நடத்தினார்.

சன் யாட் சென் நன்யாங் நினைவு மண்டபம் இன்று தேசிய மரபுடைமைக் கழகத்தின்கீழ் நிர்வகிக்கப்படும் தேசிய நினைவுச்சின்னமாகவும் மரபுடைமை அமைப்பாகவும் திகழ்கிறது. இந்தப் புதுப்பிக்கப்பட்ட அரும்பொருளகம், டாக்டர் சன் தென்கிழக்காசியாவில் மேற்கொண்ட புரட்சி நடவடிக்கைகள், 1911 புரட்சிக்கு சிங்கப்பூர் சீனர்களின் பங்களிப்புகள், புரட்சியால் சிங்கப்பூரிலும் இங்கிருந்த சீன சமூகத்திலும் ஏற்பட்ட தாக்கம் ஆகியவற்றை விவரிக்கிறது.




**இயங்கும் நேரம்**
செவ்வாய் – ஞாயிறு: காலை 10 முதல் மாலை 5 வரை
நிலையம் திங்கட்கிழமைகளில் மூடியிருக்கும்

**இங்கு வருவதற்கான வழிகள்**
பேருந்து சேவைகள்
21, 130, 131, 139, 139M, 145, 186: ஜொங்ஷான் மால்
139, 139M: EASBக்கு எதிர்ப்பக்கம் (கிழக்காசிய நிர்வாகக் கழகம்)
பெருவிரைவு ரயில்
தோ பாயோ நிலையம் (NS19) அல்லது நொவீனா நிலையம் (NS20)

**இலவச வழிகாட்டி உலாக்கள்**
ஆங்கிலம்: பிற்பகல் 2 மணி (.செவ்வாய் முதல் வெள்ளி), பிற்பகல் 3 மணி (சனி, ஞாயிறு)
மண்டரின்: பிற்பகல் 2.30 மணி (செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு)

12 Tai Gin Road, Singapore 327874
www.sysnmh.org.sg
+65 6256 7377
nhb_wqy@nhb.gov.sg

@sysnmh
@sysnmh

晚晴園 SUN YAT SEN NANYANG MEMORIAL HALL 孙中山南洋纪念馆

# SUN YAT SEN NANYANG MEMORIAL HALL

## சுன் யாட் சேன் நினைவு மண்டபம்



**இலவச நுழைவு**

சிங்கப்பூரர்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும்

## காட்சிக்கூடம் 1

வில்லாவின் வரலாற்றையும் சிங்கப்பூரில் இருந்த டாக்டர் சன் யாட் சென்னின் மூன்று முக்கிய ஆதரவாளர்களையும் பற்றி தெரிந்துக்கொள்ளுங்கள்.




“போ ஆய்” (உலகளாவிய அன்பு) எனும் சீன எழுத்துகளைக் கொண்ட இந்த எழுத்தோவியத்தை, டியோ பெங் வானுக்கு டாக்டர் சன் யாட் சென் அன்பளிப்பாக வழங்கினார் (தேதி தெரியாது).

திரு டியோ சீ ஹியனின் திரட்டு



தனது ஆதரவாளர்கள், டொங் மெங் ஹுய் சிங்கப்பூர் கிளையின் உறுப்பினர்கள் ஆகியோருடன் வான் சிங் யுவானில் டாக்டர் சன் யாட் சென் எடுத்துக்கொண்ட குழு புகைப்படம் (1905 பிற்பகுதி).

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் அனுமதியுடன் மறுபிரசுரிக்கப்பட்டது

## காட்சிக்கூடம் 2

தென்கிழக்காசியாவில் டொங் மெங் ஹுய் (சீனப் புரட்சிக் கூட்டணி) அமைப்பின் தலைமையகமாக சிங்கப்பூர் ஆற்றிய பங்கை ஆராயுங்கள்.




## காட்சிக்கூடம் 3

1911 புரட்சி சிங்கப்பூரிலும் வட்டார நாடுகளிலும் வாழ்ந்துவந்த சீன சமூகத்தினர்மீது ஏற்படுத்திய தாக்கத்தைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.



வூச்சாங் கிளர்ச்சியின்போது சுடப்பட்ட பீரங்கி குண்டு (1911).

சன் யாட் சென் நன்யாங் நினைவு மண்டபத்தின் திரட்டு

## காட்சிக்கூடம் 4

சீன முன்னோடித் தொழிலதிபர்கள் சிங்கப்பூருக்கு அளித்த பொருளியல், சமூகப் பங்களிப்புகள் பற்றி மேலும் தெரிந்து கொள்ளுங்கள்.




சிங்கப்பூர் குடியுரிமைக்கான பதிவுச் சான்றிதழ் (1957).

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் திரட்டு




சீனப் பொது வர்த்தக விவகாரச் சங்கத்தின் அதிகாரபூர்வ நிகழ்ச்சிக் குறிப்புகள் (20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி).

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் திரட்டு



ஹெய்டல்பர்க் “காற்றாலை” எழுத்தச்சு (1950கள்).

சன் யாட் சென் நன்யாங் நினைவு மண்டபத்தின் திரட்டு



“குவான் ஹுவா” பாடப்புத்தகம் (மண்டரின்) தொகுப்பு 2 (1906).

சன் யாட் சென் நன்யாங் நினைவு மண்டபத்தின் திரட்டு



பள்ளிப் பையாகப் பயன்படுத்தப்பட்ட, பழுப்புநிறக் தோல் கைப்பெட்டி (20ஆம் நூற்றாண்டின் மத்தியில்)

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் திரட்டு